இணைப்பு.

எண் 441ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 74 க்க-ன விடையைக் காண்க.

விவர அறிக்கை.

சங்கக் கோரிக்கைகள்.	அரசு எடுத்த நடவடிக்கை/இறுதி முடிவு.
1. பகுதி நேரம் என்பதனை மாற்றி தொகுதி எழுத்தர் என்ற நிலைக்கு உயர்த்தி தற்போது வேலை பார்த்து வரும் அனைவரையும் வயது வரம்பு, கல்வித் தகுதி பாராது அனுபவத்தை அடிப்படையாக வைத்து தக்க பணிப்பாதுகாப்பு அளிக்க.	ஊராட்சி எழுத்தர்கள் பகுதி நேர எழுத்தர்கள் ஆவர். இவர்களுக்கு மக்கட் தொகையின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே இவர்கள் கோரிக்கை ஏற்க இயலாது.
2. ஊதிய உயர்வு அளிக்க வேண்டும்.	பகுதி நேர எழுத்தர்களின் ஊதியம் உயர்ந்த பட்சம் மாதம் ரூ. 90 ஆகவும் குறைந்த பட்சம் ரூ. 37·50 ஆகவும் 1—9—1981 முதல் அமுலுக்கு கொண்டுவர 29—7—1981 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1350 இல் உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது. ஒரு பகுதி நேர எழுத்தர் மூன்று அல்லது நான்கு ஊராட்சிகளில் பணி புரிவார். ஆகையால் சராசரியாக ரூ. 200 முதல் ரு. 300 வரை ஊதியம் பெறுவார். மேற்படி உத்திரவுப்படி மாத ஊதியம் ரூ. 300-க்கு மேல் பெற கூடாது.
3. ஊதியம் மாதந்தோறும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பட்டுவாடா செய்யப்பட்டு, பின்னால் சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதிகளிலிருந்து பிடித்துக் கொள்ளச் செய்தல்.	பகுதி நேர எழுத்தர்கள் ஊராட்சிகளில் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஆகையால் மாற்றம் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4.	எல்லா அரசு ஊழியர்களுக்கும் கிடைத்து வரும் விழா முன்பணம், பயணப்படி, பஞ்சப்படி, தினப்படி கிடைப்பது போல் செய்ய.	இவர்கள் பகுதி நேர ஊழியர்கள், எனவே நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகையினை இவர்களுக்கு வழங்க இயலாது.
5.	தகுதியுள்ளோர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி இவைகளில் ஏற்படும் காலியிடங்களில் பணியில் அமர்த்தவும் தக்க முன்னுரிமையும் வேண்டுதல்.	ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் பதவிக்குத் தகுதியுள்ள ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான கருத்துரு அரசு பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS